# உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

## தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரி (தே.க.வ)

### 2011 மார்ச் மாதத்திற்கான கொடுப்பனவுகளைச் செலுத்துதல்

தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரியைச் செலுத்தப் பொறுப்புடையவர்கள் 2011.03.31 ஆம் திகதி முடிவடைந்த காலாண்டிற்கான இறுதி தவணைக் கட்டணத்தைச் செலுத்துவதற்கான இறுதித் திகதி :

**2011.04.20**

(அ) ஏதேனும் பொருட்களை (ஏதேனும் விலக்களிக்கப்பட்ட பொருட்கள் தவிர) உற்பத்தி செய்யும் வியாபாரத்தினை நடத்தும், அல்லது

(ஆ) ஏதேனும் சேவைகளை (ஏதேனும் விலக்களிக்கப்பட்ட சேவைகள் தவிர) வழங்கும் வியாபாரத்தினை நடத்தும்,

(இ) மொத்த அல்லது சில்லறை வியாபாரங்களை மேற்கொள்ளல் (அத்தகைய பொருட்களின் இறக்குமதியாளரால் நேரடியாக 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விஷேட நுகர்வுப்பொருள் அறவீட்டுச் சட்டத்தின் கீழ்வரும் ஏதேனும் பொருட்கள், மருந்துப் பொருட்கள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நபர்களினால் வெளிநாட்டு நாணயத்திற்கான இரத்தினக்கல் அல்லது ஆபரண விற்பனை).

என்பன **பொறுப்புடைய புரள்வின் மீது 2%** தே.க. வரியினை செலுத்துவதற்குத் தேவைப்படுத்தப்பட்டுள்ளது. (மொத்த அல்லது சில்லறை வியாபாரம் தொடர்பாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள திருத்தங்கள் செய்யப்பட்டதன் பின்னர்)

குறிப்பு :

- பின்வரும் கூறுகள் பொறுப்புடைய புரள்வின் பகுதியாக இருக்கமாட்டாது.
  - பெ.சே. வரிக்கூறு ;
  - ஏற்பட்ட அறவிட முடியாக் கடன்கள் (எவ்வாறாயினும், ஏலவே பதிவழிப்புச் செய்யப்பட்ட அறவிட முடியாக் கடன்கள் பின்னர் அறவிடப்பட்டால் அவை கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்) அல்லது
  - குறித்த காலாண்டில் 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் செலுத்தப்பட்ட உற்பத்தித் தீர்வை ஏதேனும்.
  - ஏற்றுமதி அபிவிருத்தித் தொகைத் திட்டத்தின் கீழ் செலுத்தப்பட்டத் தொகை.
  - அமைச்சரின் அங்கீகாரத்துடன் ஏதேனும் சர்வதேச நிகழ்வுகளுக்கு ஏதேனும் பொருட்கள் அல்லது சேவைகளின் வழங்கலிருந்து ஏதேனும் பரள்வு.
- இறக்குமதி செய்யப்பட்ட ஏதேனும் பொருட்கள் (விலக்களிக்கப்பட்ட பொருட்கள் தவிர) சுங்க நிலையில் பெ.சே.வரி நோக்கங்களுக்கான பெறுமதி மீது சுங்க நிலையில் தே.க.வரிக்குப் பொறுப்பாக்கப்படும். அத்தகைய பொருள் எவ்வித தயாரிப்புக்கும் உட்படாது உடனடியாக விற்பனை செய்யப்படுமாயின் அத்தகைய பொருட்களின் விற்பனையும் கூட 2011.01.01 ஆம் திகதியிலிருந்து பயன்வலுப்பெறும் வகையில் மொத்த அல்லது சில்லறை வியாபாரம் என்ற வகையில் பெ.சே.வரிக்குப் பொறுப்பாக்கப்படும்..
- புகையிலை உற்பத்திகளின் விற்பனை தவிர்ந்த எவரேனும் விநியோகத்தரின் (பொருளாதார சேவைக் கட்டணச் சட்டத்தில் குறிப்பிட்டவாறு) மொத்த அல்லது சில்லறை வியாபாரத்திலிருந்து 75% பொறுப்புடைய புரள்வு மற்றும் பிற மொத்த அல்லது சில்லறை வியாபாரத்திலிருந்து பொறுப்புடைய புரள்வில் 50% தள்ளுபடியாக கழிப்பனவு செய்யப்பட முடியும்.(இந்த திருத்தத்தினை மேற்கொள்வதற்கு முன்னர் பொறுப்பு புரள்வு ரூபா 500,000 இனை விஞ்சும் போதிருக்கும் பொறுப்புக்கள்).

**தே.க.வரி செலுத்துவதற்கு பொறுப்புடைய ஆட்கள் திணைக்களத்துடன் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுகொள்ளப்படுகின்றனர். (ஏற்கனவே பதிவு செய்து கொள்ளாதவர்களாயின்) பதிவுக்கான வழிகாட்டல்கள் மற்றும் படிவங்களினை அருகிலுள்ள உள்நாட்டு இறைவரி பிராந்திய அலுவலகத்தில் அல்லது உள்நாட்டு இறைவரி கட்டிடத்தின் 12ஆம் மாடியிலுள்ள தேசக்கட்டுமான வரி கிளையில் அல்லது 1 ஆம் மாடியில் அமைந்துள்ள வரி செலுத்துநர் சேவைப் பிரிவில் பெறுக் கொள்ள முடியும்.**

**கொடுப்பனவுகள் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் பெயருக்கு 7041556 என்ற கணக்கு இலக்கத்திற்கு (இலங்கை வங்கி தப்ரபோன் கிளை) வரவு வைப்பதன் மூலம் இலங்கை வங்கியின் ஏதாவதொரு கிளையில் மேற்கொள்ளப்படலாம்.**

**காசோலையின் மறுபுறத்தில் உங்களது வரி செலுத்துனர் அடையாள இலக்கத்தையும் (TIN) வரிவிதிப்பனவு காலத்தையும் தயவுகூர்ந்து குறிப்பிடவும்.**

மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து பின்வரும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| தே.க.வரிக் கிளை | தொலைபேசி - 011-2338581, 011-2338721, 011-3009297, 011-3009031 |
| வரி செலுத்துநர் சேவைப்பிரிவு | தொலைபேசி - 011-2328702, 011-3009093, 011-3009257 |
| செயலகக் கிளை | தொலைபேசி - 011-2338635, 011-2338570 |

உள்நாட்டு இறைவரி இணையத்தளம் : www.inlandrevenue.gov.lk

## உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்

வரி - சிறந்ததொரு எதிர்காலத்திற்காக